முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி புரட்டாசி மாதம் 21ம் திகதி முதல் புரட்டாசி மாதம் 28ம் தேதி வரை**

**அக்டோபர் 7ம் திகதி முதல் அக்டோபர் 14ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1. அருள் ஞான சித்தர் பெருமக்களை**
**அணிகலனாக கொண்ட தமிழகமே**
**பொருள் வளம் கூட்டும் இயற்கை**
**பெருமைமிக்க நல் பரதமே**

**2. பரதம் தமிழகம் எல்லைதனில்**
**பாடிடுவேன் விளம்பி தரிவை திங்கள்**
**இருபானோர் திகதி மேல் எழுநான்கு திகதி வரை**
**இந்த வார நிகழ்வாக எதிர்கால பலனை**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 21ம் நாள் 07.10.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 28ம் நாள் 28.10.2018, ஞாயிறு முடிய)**
**இந்த வார நிகழ்வாக எதிர்கால பலனை**

**3. பலனாக வார ஆசி தன்னை**
**பாடிடுவேன் சுப்பிரமணியர் யானும்**
**சலனமுற மக்களின் மேலான**
**சாற்றிடுவேன் வரிச்சுமை உயரும்**

**4. உயர்வுக்கான வளர்ச்சிப் பணிகளும்**
**ஊழலில் மாட்டி தடைபடும்**
**தயவு கொண்டு சேவை ஆற்றும்**
**தலைமைகளும் தடுமாற நேரும்**

**5. நேருமைபட வளர உயர வேண்டிய**
**நிதி நீதித் துறைகளும் கூட**
**பெருமை காணா முடங்க நேரும்**
**பொருளாதார வளர்ச்சி காணா**

**6. காணாத பரதமும் தமிழகமும்**
**கடன் சுமை கட்டண விகிதமென**
**காணா வண்ணம் உயர நேரும்**
**கண்ணியமிக்க சமூக நலம் காக்கும்**

**7. காக்கும் எளிமை கொண்ட தலைமை**
**கருணைமிக்க தலைமை இல்லா**
**தேக்கமும் மக்களுக்கு ஏக்கமும்**
**தேற்றமிலா நிலையும் தொடரும்**

8. தொடர இந்திய தேசத்தின்
தெய்வீக பூமி தமிழகம்
இடர் கண்டால் வளர்ச்சி முடங்கினால்
இந்தியா தன் பலத்தை இழக்க நேரும்

9. நேருமைபட மாநில பிராந்தியம்
நடுவணால் நேசக்கரம் படவும்
தருமம்படவும் நடத்தப்பட்டு வரவே
தரணியிலே தமிழகம் வளர பரதம் வளரும்

10. வளரும் சூழலை உருவாக்கிட
வடிவேலன் என் அருளாக வந்த அரங்கன்
வளரும் தருமநெறி ஏற்று உலகோர் வர
வையகமே தரும ஞானபலம் பெறும் வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**இந்தியா தமிழகம் தன்னில் விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 21ம் நாள் 07.10.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 28ம் நாள் 14.10.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

அருள்பலமும் ஞானபலமும் மிகுந்த அருள்ஞான சித்தர் பெருமக்களை அணிகலனாகக் கொண்டிட்ட தமிழக நாடே பொருள் வளத்தினை அதிகமாக்கும்படியான இயற்கை வளத்தினையும் பெருமைகளையும் உடைய பாரத தேசமே இந்த தேசத்தினிலே விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 21ம் நாள் 07.10.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 28ம் நாள் 14.10.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை சுப்பிரமணியர் யானும் வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

இந்த வாரத்தினில் மக்களின் மீதான வரிச்சுமை உயர்வடையும். வரிச்சுமையை உயர்த்துவதற்கு காரணமாக சொல்லப்படுகின்ற வளர்ச்சி பணிகள் ஊழலில் மாட்டி தடைபடும். தயவு உணர்ச்சியோடு செயல்படும் அதிகாரிகள் தலைமைகள் எல்லாம் தடுமாற்றம் அடைந்திட நேரும்.

நீதியும் நேர்மையும் மிக்க நீதித்துறை கூட இந்த வாரம் பெருமை காண முடியாமல் முடக்கம் கொள்ள நேரிடும்.

தமிழகமும், பாரதமும் பொருளாதார வளர்ச்சி காணாது கடன்சுமை அதிகரித்து மக்கள் மீது கட்டணங்கள் வரிகள் என சுமத்தப்பட்டு என்றும் காணாத அளவு மக்களின் மீது அதிக அளவினில் சுமைகள் ஏற்படும். கண்ணியமாய் சமூக நலனைக் காக்கின்றவிதமாக தலைமையில் ஆட்சி செய்பவர்கள் கருணைமிக்க தலைமை பொறுப்பில் உள்ளவர்கள் இல்லாமல் நாடு ஆட்சி செய்யப்படுவதினால் மக்களுக்கு துன்பம் எப்போது தீரும் என்ற ஏக்கமும், தேற்றிக் கொள்ளும் வழிமுறைகளும் இல்லாத துன்பநிலையே தொடர்ந்திடும்.

இந்தியாவின் தெய்வீக பூமியாக போற்றப்படும் தமிழகம் தொடர்ந்து துன்பத்திற்கு ஆளானால் அதனுடைய வளர்ச்சி முடங்கினால் இந்தியா தமது பலத்தினை இழக்க நேரிடும். மாநில அரசுகள் மீது மத்திய அரசு நேசக்கரம் நீட்டி தருமநெறியுடன் நடத்தப்பட்டு வந்தால் தமிழகம் வளர்ச்சியடையும் பாரத தேசமும் உயர்வடையும்.

**தமிழகமும் இந்தியாவும் வளர்ச்சி பெற்ற நாடுகளாக ஆகி உலக அரங்கில் சிறப்புடன் விளங்கிட அதற்கான சூழல் உருவாகிட முருகப்பெருமான் எனது அருளாக வந்த ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தருமநெறிகளை ஏற்று உலகோர் நடந்து வர, இவ்வுலகமே உயர்வடைந்து தரும ஞான பலம் பெற்ற ஞானபூமியாக மாறி செழிப்படையும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.**

–சுபம்–